இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வியாழக்கிழமை 19-06-2025

# பழனிசாமிதான் போலி விவசாயி!

யார் உண்மையான விவசாயி என்று தமிழ்நாட்டு மக்கள் தீர்மானிப் பார்கள் என்றும், டெல்டா மாவட்டத்தில் முதலமைச்சர் ஸ்டாலின் கால் வைத்திருக்கக் கூடாது என்றும் 'போலி' விவசாயி பழனிசாமி புலம்பி இருக்கிறார். **காவிரிப் பிரச்சினை தொடங்கி அனைத்திலும் துரோகம் செய்தவர்தான் பழனிசாமி.**

காவிரி நடுவர் மன்றம் அமைக்க வேண்டும் என்ற கோரிக்கையை முதன்முதலாக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் முன்வைத்தார்கள். இதை வலியுறுத்தி தமிழ்நாடு சட்டமன்றத்தில் 1971-ஆம் ஆண்டு தீர்மா னமும் நிறைவேற்றினார்கள். ஹேமாவதி அணை கட்டுவதை தடுத்து நிறுத்த உச்சநீதிமன்றத்தில் வழக்கும் தாக்கல் செய்தது தி.மு.க. அரசு. முரசொலி மாறன் அவர்களும் தனியாக ஒரு வழக்கைத் தாக்கல் செய்தார். தஞ்சை மாவட்டத்தில் உள்ள விவசாயச் சங்கங்களும் இதற்குத் துணை நின்றன.

இந்த வழக்குகள் ஒரு பக்கம் நடந்தாலும் **1989 ஆம் ஆண்டு பிரதமர் ஆன சமூகநீதிக் காவலர் வி.பி.சிங் அவர்கள் மூலமாக காவிரி நடுவர் மன்றம் அமைக்க வைத்தவர் முதலமைச்சர் கலைஞர். 25.6.1991-ஆம் நாள் இடைக்கால தீர்ப்பு வந்தது. ஆண்டுக்கு 205 டி.எம்.சி. தண்ணீர் தர வேண்டும் என்ற இடைக்கால தீர்ப்பை வாங்கித் தந்தவர் கலைஞர் அவர்கள்.**

**இப்படி அறிவிக்கப்பட்ட தண்ணீரைக் கர்நாடக அரசு ஒழுங்காக வழங்கு கிறதா என்று யார் கண்காணிப்பது? அதற்கான ஒரு கண்காணிப்பு ஆணை யத்தை அமைப்பதற்கான முயற்சிகளை 1997ஆம் ஆண்டு செய்தவரும் முதலமைச்சர் கலைஞர் அவர்கள்தான். பிரதமர் வாஜ்பாய் அவர்களது ஆட்சிக் காலத்தில் இப்படி ஒரு ஆணையம் அமைக்கப்பட்டது. காவிரி நடுவர் மன்ற இறுதித் தீர்ப்பும் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்த போதுதான்.** 2007-ஆம் ஆண்டு வந்தது. 192 டி.எம்.சி.தான் என்றுதான் தீர்ப்பு வந்தது. அனைத்துக் கட்சிக் கூட்டம் போட்டு அனைவர் முடிவின் படி நீதிமன்றத்துக்கும் போனோம். காவிரி மேலாண்மை வாரியத்தை அமைக்க வேண்டும் என்று சொன்னோம். இந்த வழக்கை ஒழுங்காக, முறையாக நடத்தாத ஆட்சிதான் அ.தி.மு.க. ஆட்சி.

2017-ஆம் ஆண்டு உச்சநீதிமன்றத்தில் இறுதி விவாதம் வந்தபோது பழனிசாமி அரசு சரியாக வாதிடவில்லை. காவிரி ஆணையத்தை பா.ஜ.க. அரசு மூலமாக அமைக்க பழனிசாமி அரசு அழுத்தம் தரவில்லை. காவிரி ஆணையம் அமைக்க வேண்டும் என்று போராடியதும் தி.மு.க.தான். தமிழகம் வந்த பிரதமருக்கு தி.மு.க. தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் கருப்புக்கொடி காட்டினார்கள். காவிரி உரிமை மீட்புப் பயணத்தை மேற்கொண்டார். இரண்டு குழுக்களாக இந்தப் பயணத்தை தி.மு.க. நடத்தியது. ஆனால் அ.தி.மு.க. அரசு மெத்தனமாக நடந்ததால் அதிகாரம் இல்லாத ஜல்சக்தி துறையோடு அதனைச் சேர்த்து விட்டார்கள். **தனது நாற்காலியைக் காப்பாற்றிக் கொள்ள காவிரி உரிமையை தாரை வார்த்த போலி விவசாயிதான் இந்த பழனிசாமி.**

விவசாயிகளை நிலத்தில் இருந்து விரட்டுவதற்காக பா.ஜ.க. அரசால் கொண்டு வரப்பட்ட சட்டம்தான் மூன்று வேளாண் சட்டம். இதனை ஆத ரித்து அன்று பேசியவர் பழனிசாமி. போராடிய விவசாயிகளை தரகர்கள் என்றார் பழனிசாமி. இந்தச் சட்டம் நன்மையானது என்று யாருடனும் விவாதம் நடத்தத் தயார் என்று வேட்டியை முறுக்கிக் கட்டினார் பழனி சாமி. இந்த பழனிசாமிதான் இன்றைக்கு நானும் விவசாயி என்கிறார்.

**தி.மு.க. ஆட்சி மலர்ந்ததும், "மூன்று சட்டங்களும் நமது நாட்டின் வேளாண் வளர்ச்சிக்கும், விவசாயிகளின் நலனுக்கும் உகந்ததாக இல்லை என்பதால், அவை ஒன்றிய அரசினால் இரத்து செய்யப்படவேண்டும் என இந்தச் சட்ட மன்றப் பேரவையில் ஒருமனதாக இத்தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது"** என்று தீர்மானம் கொண்டு வந்தார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள். **இந்த தீர்மானம் வரும் போது தமிழ்நாடு சட்டமன்றத்தில் இல்லா மல் வெளிநடப்பு செய்த போலி விவசாயிதான் பழனிசாமி.**

* **காவிரி உரிமையை நிலைநாட்டாதவர் பழனிசாமி.**
* **மூன்று வேளாண் துரோக சட்டங்களை ஆதரித்தவர் பழனிசாமி.**
* **"விவசாயிகள் கடனை ரத்து செய்ய மாட்டேன்" என்று சொல்லி உச்சநீதி மன்றம் வரை போனவர் பழனிசாமி.**
* **டெல்டா மாவட்டத்தில் ஹைட்ரோகார்பன் திட்டத்துக்கு எதிராக போராடிய விவசாயிகளை ஒடுக்கியவர் பழனிசாமி.**
* **வேளாண் மண்டலம் என்பதை போலியாக அறிவித்து, ஏற்கனவே அறிவிக்கப்பட்ட ஹைட்ரோகார்பன் திட்டங்கள் செயல்படும் என்ற சதி செய்தவர் பழனிசாமி.**
* **கிசான் திட்டத்தில் போலி நபர்களைச் சேர்த்து முறைகேட்டுக்கு உதவிய ஆட்சிதான் பழனிசாமி ஆட்சி.**
* **குடிமராமத்துப் பணிகளில் ஊழல் செய்த ஆட்சிதான் பழனிசாமியின் ஆட்சி.**
* **நீர் வள உரிமையை பறிக்கும் ஜல்சக்தி திட்டத்தை ஆதரித்தவர்தான் பழனிசாமி.**
* **அணை பாதுகாப்பு உரிமையை விட்டுத் தந்தவர்தான் பழனிசாமி.**

இத்தகைய அரசியல் 'களை' தான் பழனிசாமி. இக்'களை', வரும் தேர்தலில் முழுமையாக அகற்றப்பட வேண்டும்.



திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலின் குடமுழுக்கு விழா வருகிற ஜூலை மாதம் 7 ஆம் தேதி நடைபெறுவதையொட்டி, நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. ஆகியோர் கோவிலுக்கு வரும் பக்தர்களின் வசதிக்காக வாகன நிறுத்துமிடம் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் ஏற்படுத்துவது குறித்து திருச்செந்தூர் நகராட்சிக்கு உட்பட்ட பகுதியில் ஆய்வு மேற்கொண்டனர். உடன் அமைச்சரும், தூத்துக்குடி தெற்கு மாவட்டச் செயலாளருமான அனிதா ஆர். இராதாகிருஷ்ணன், எம்.சி.சண்முகையா எம்.எல்.ஏ., மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி, எஸ்.ஆர்.எஸ். உமரி சங்கர், வசந்தம் ஜெயக்குமார், பை.மூ.ராமஜெயம், துணைத் தலைவர் செங்குழி ரமேஷ், சிவஆனந்தி ரமேஷ், வாள் சுடலை மற்றும் மாவட்ட ஆட்சியர் இளம் பகவத், கூடுதல் ஆட்சியர் ஐஸ்வர்யா, மாநகராட்சி ஆணையர் மதுபாலன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

### 'கிளாட்' தேர்வில் வெற்றி பெற்ற திருச்சி மாணவியை நேரில் பாராட்டி

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தனது பேனாவை பரிசளித்து வாழ்த்தினார்!

திருச்சி, ஜூன் 18 -

திருச்சி மிளகுபாறை பண்டார வீதியைச் சேர்ந்தவர் ராகினி. இவர் பெரியமிளகு பாறையில் உள்ள அரசு ஆதிதிராவிடர் நலப் பள்ளியில் பிளஸ் 2 வரை படித்து, தேசிய சட்ட பல்கலைக்கழகங்களுக்கான பொது நுழைவுத்தேர்வான 'கிளாட்' நுழைவுத் தேர்வில் வெற்றி பெற்று ஜபல்பூரில் உள்ள தர்மசாஸ்திரா தேசிய சட்ட பல்கலைக்கழ கத்தில் சேர்ந்துள்ளார்.

இந்த நிலையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தஞ்சையில் 2 நாள் சுற்றுப்பயணம் மேற்கொண்டு பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு, சென்னை வருவதற்காக நேற்று முன்தினம் மதியம் திருச்சிக்கு வருகை தந்தார்.

பின்னர் திருச்சி பெரிய மிளகுபாறைக்கு வந்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், மாணவி ராகினிக்கு சால்வை அணிவித்து வாழ்த்துத் தெரிவித்ததுடன், தான் பயன்படுத்தி வந்த பேனாவை மாணவிக்கு பரிசாக அளித்து நன்றாக படிக்கும்படி அறிவுரை கூறினார்.

இதுகுறித்து மாணவி ராகினி செய்தி யாளர்களிடம் கூறும்போது,

"முதலமைச்சரே நேரில் வந்து எனக்கு வாழ்த்து கூறியது மிகுந்த மகிழ்ச்சி அளிக் கிறது. நான் முதல்வன் திட்டத்தில் பிரத்யேக பயிற்சி பெற்றதால்தான் 'கிளாட்' நுழைவுத் தேர்வில் வெற்றிபெற முடிந்தது.

'நான் முதல்வன்' திட்டத்தை கொண்டு வந்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும், எனக்கு உறுதுணையாக இருந்த ஆசிரியர்களுக்கும் நன்றி தெரிவித் துக்கொள்கிறேன்" என்றார்.

இந்த நிகழ்ச்சியின்போது, அமைச்சர்கள் கே.என்.நேரு, அன்பில் மகேஷ் பொய்யா மொழி ஆகியோர் உடன் இருந்தனர்.

### பெண்களுக்குப் பயத்தை உண்டாக்கி அவர்களை வீட்டுக்குள்ளேயே முடக்கும்

## பா.ஜ.க.வின் கொள்கையை பழனிசாமி வழிமொழிவது வெட்கக்கேடு!

### அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிக்கை!

**சென்னை, ஜூன் 19–**

**வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு :–**

கடலூர் பண்ருட்டி அருகே மூதாட்டி பாலியல் துன்புறுத்தல் செய்யப்பட்டதாகச் சொல்லப்படும் வழக்கில் விரைவாகக் காவல் துறையினர் குற்றவாளி சுந்தரவேல் என்பவனைச் சுற்றி வளைத்துச் சுட்டுப் பிடித்துள்ள னர். இந்த வழக்கில் வேறு யாருக் கும் தொடர்பு இல்லை; கூட்டு பாலியல் வன்கொடுமை நடக்க வில்லை என்பது விசாரணையில் தெரியவந்துள்ளது. போலீஸ் விரைந்து செயல்பட்டு குற்றவாளி யைக் கைது செய்துள்ளதைக் கண்டு பொறுக்க முடியாத பழனி சாமி வழக்கம் போல அவதூறு அரசியலைத் தொடங்கியிருக் கிறார்.



பழனிசாமி ஆட்சியில் பெண் களுக்கு எதிராக பாலியல் குற்றங் கள் நிகழ்ந்தால், குற்றவாளி களுக்கு ஆதரவாகச் செயல்பட்டு, பாதிக்கப்பட்ட பெண்ணின் குடும் பத்தையே தாக்கி மிரட்டும் சூழல் நிலவியது தற்போது அது மாறி பெண்களுக்கு எதிராக எவர் குற்றச் செயலில் ஈடுபட்டாலும் விரைந்து நடவடிக்கை மேற் கொண்டு கைது செய்யப்படுகிறார் கள். அதோடு வழக்கு விசார ணையை விரைந்து முடித்து உச்சபட்சத் தண்டனையும் பெற் றுக் கொடுக்கப்பட்டு வருகிறது.

2018 செப்டம்பரில் 60 வயது மூதாட்டியைப் பாலியல் வன் கொடுமை செய்த 2 இளைஞர் களின் ஜாமீன் மனுவை விசா ரித்த நீதிபதி கிருபாகரன், "18 மாத கைக்குழந்தை முதல் 100 வயது மூதாட்டி வரை பாலியல் வன் கொடுமைக்கு ஆளாகின்றனர். பாலியல் வன்கொடுமைகளைத் தடுக்க எடுக்கப்பட்டுள்ள நடவடிக் கைகள் என்ன?" என பழனிசாமி ஆட்சியை பற்றித்தான் அன் றைக்குக் கேள்வி எழுப்பினார். இதையெல்லாம் மறந்துவிட்டு கூச்சமே இல்லாமல் யோக்கிய சிகாமணி போல பழனிசாமி வேஷம் போடுகிறார்?

**பழனிசாமி ஆட்சியின் குற்றச் சம்பவங்கள்!**

- 2021 ஜனவரியில் துவரங் குறிச்சி சந்தைப்பேட்டையில் 68 வயதான மூதாட்டியைப் பாலியல் வன்கொடுமை செய்து கொன்ற கஞ்சாவுக்கு அடிமையான 16 வயது சிறு வன்.
- 2021 பிப்ரவரியில் திருவொற் றியூர் மார்க்கெட் பகுதியில் 80 வயது மூதாட்டிக்குப் பாலியல் வன்கொடுமை.
- 2020 செப்டம்பரில் மதுரை மேலூர் அருகே குடிபோதை யில் 80 வயது மூதாட்டியைப் பாலியல் வன்கொடுமை செய்த இளைஞர்.
- 2020 அக்டோபரில் திருநெல் வேலி: பணகுடி கோரி காலனி யில் 68 வயது மூதாட்டியைப் பாலியல் வன்கொடுமை செய்த இளைஞர்.
- 2020 டிசம்பரில் பொள்ளாச்சி அருகே உள்ள நம்பியமுத் தூர் பகுதியில் கணவரை இழந்த 75 வயது மூதாட்டிக்கு பாலியல் தொல்லை கொடுத்த இளைஞர்.

இப்படி பழனிசாமி ஆட்சியில் மூதாட்டிகள் கூட பாலியல் வன் கொடுமைக்கு ஆளானதைப் பட்டியலிட முடியும்.

தனது ஆட்சியில் நடந்த குற்றச் சம்பவங்களை மறந்துவிட்டு திமுக ஆட்சியில் நடக்கும் குற்றங் களை மட்டுமே பூதாகரமாகப் பேசுவதைப் பார்த்தால் பழனி சாமி மறதி நோய்க்குச் சிகிச்சை பெறுவது நல்லது.

பெண்கள் முன்னேற்றத்திற்கா கப் பல்வேறு திட்டங்களையும் செயல்படுத்தி பெண்கள் பாதுகாப் பில் துளியும் சமரசமின்றித் திரா விட மாடல் அரசு செயலாற்றி வரு வதால்தான், இன்று இந்தியா விலேயே அதிகமாகப் பெண்கள் வேலைக்குச் செல்லும் மாநிலமா கத் தமிழ்நாடு திகழ்கிறது. அதோடு இந்தியாவிலேயே பெண்களுக்குப் பாதுகாப்பான மாநிலமாகவும் தமிழ்நாடு முன்னணியில் உள் ளது. அதன் காரணமாகத் தான் பெண்கள் விரும்பும் ஆட்சியாக வும், பெண்களின் பெரும் ஆதரவு பெற்ற முதலமைச்சராகவும் முதல மைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இருக்கிறார்.

இதனையெல்லாம் கண்டு பொறுக்காமல் எங்காவது ஏதா வது அசம்பாவிதம் நடந்து விடாதா? அதை வைத்து அரசி யல் செய்ய முடியாதா? என நாள்தோறும் அலைகிறார் பழனி சாமி. உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு குற்றவாளிகள் கைது செய்யப்பட்டாலும் கூட உள்நோக்கத்தோடு அதை வைத்து அரசியல் செய்கிறார். பழ னிசாமியின் இந்த அரசியல் மறைமுகமாகப் பெண்களின் வாழ்வாதாரத்தை அச்சுறுத்து கிறது.

**பாலியல் குற்றவாளிகளான அ.தி.மு.க. நிர்வாகிகள்!**

பெண்களுக்குப் பயத்தை உண்டாக்கி அவர்களை வீட்டுக்குள்ளேயே முடக்கும் பாஜ கவின் கொள்கையை பழனிசாமி வழிமொழிவது வெட்கக்கே டானது.

பழனிசாமியின் ஆட்சி பெண் களுக்கு எதிரான கொடுங்கோல் ஆட்சியாக இருந்ததற்கு பொள்ளாச்சி கூட்டுப் பாலியல் வன்கொடுமையே சாட்சி. பாலி யல் குற்றவாளியான அ.தி.மு.க. நிர்வாகிகளுக்கு அடைக்கலம் கொடுத்துப் பாதுகாத்த பழனி சாமிக்கு, தற்போது பெண்களின் பாதுகாப்பே முதன்மை என ஆட்சி நடத்தி வரும் முதலமைச்சர் அவர் களைப் பற்றிப் பேச எந்தத் தகுதியுமில்லை.

அ.தி.மு.க. ஆட்சியில் கஞ்சா வும், தடை செய்யப்பட்ட குட்காவும் கடல் போலப் பெருகிக் கிடந்ததை எல்லாம் பழனிசாமி மறந்து விட்டாரா? குட்கா பாஸ்கர் என மக்கள் கூறும் அளவு அமைச் சர்களை வைத்து குட்கா விற்று கல்லா கட்டிய பழனிசாமியா போதைப் பொருட்கள் பற்றிப் பேசு வது? அ.தி.மு.க. ஆட்சியில் மக்க ளைச் சீரழித்த கஞ்சா, குட்கா போதைப் பொருட்களை எல்லாம் இரும்புக் கரம் கொண்டு அடக்கி அதன் புழக்கத்தைத் தடுத்துள்ள ஆட்சி திராவிட மாடல் ஆட்சி என் பது மக்களுக்குத் தெரியும்.

தனது கூட்டணிக்குள் நடக்கும் குஸ்தியையும், பா.ஜ.க.வின் ஆட்சி அதிகார மிரட்டல்களையும் சமாளிக்க முடியாமல் திணறும் அடிமை பழனிசாமி அதை மடை மாற்ற வீண் அவதூறுகளைக் கொட்டி என்னதான் கலர் கலராய் ரீல் விட்டாலும் அது எதுவும் மக் கள் மத்தியில் எடுபடாது.

தமிழ்நாட்டு மக்கள் முடிவு செய்து விட்டார்கள் 2026ல் மீண்டும் திராவிட மாடல் ஆட்சி 2.0 அமையும், முதலமைச்சர் ஸ்டாலின் அவர்கள் மீண்டும் முதலமைச்சராவது உறுதி. கையில் இருக்கும் எதிர்க்கட்சித் தலைவர் பதவியையாவது காப் பாற்றிக் கொள்வீரா? இல்லை அதையும் அமித்ஷா காலடியில் அடமானம் வைத்துவிட்டீரா அடிமை பழனிசாமி அவர்களே!

இவ்வாறு அவர் தெரிவித் துள்ளார்.